2. தகவல் கோரல்

(அ) மாநில மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர் நியமனம்

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தனி நீதிமன்றங்களுக்கு 3 நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். அவர்களிலே ஒருவருடைய பெயர் உயர் நீதிமன்ற நீதிபதி பதவிக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. அந்தப் பரிந்துரை ஏற்கப்படவில்லை. அதற்குப் பிறகு, அவர் தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத்தினுடைய உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பிறகு மாநில மனித உரிமை கமிஷன் உறுப்பினராக நியமிக்கப்பட்டு இருக்கிறார். மனித உரிமை கமிஷன் உறுப்பினர் பதவி என்பது உயர் நீதிமன்ற நீதிபதி பதவிக்கு நிகரானது. எனவே, அவர் அரசுத் தேர்வாணையத்தினுடைய உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு இந்தப் பதவியை ஏற்றுக்கொண்டு இருக்கிறார். அரசியல் அமைப்புச் சட்டம், பிரிவு 319-இன்படி தேர்வாணையத்திலே தலைவராகவோ, உறுப்பினராகவோ இருந்த ஒருவர் அரசுப் பணி எதிலும் அமரக்கூடாது என்பது தெளிவாக இருக்கிறது. எனவே, இந்த நியமனம் அரசியல் சட்டத்திற்கும், விதிமுறைகளுக்கும் உட்பட்டதுதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோஜ் பாண்டியன் அவர்கள் இதுகுறித்து அவையிலே வினா எழுப்பினார்கள். இது அரசியல் சட்டத்திற்கு மாறான ஒரு நியமனம், இது ஒரு தவறான நியமனம், ஏற்கெனவே தனி நீதிமன்றத்திலிருந்துவிட்டு, பிறகு தேர்வாணையத்திலிருந்துவிட்டு, பிறகு இப்போது மாநில மனித உரிமைகள் ஆணையத்திலே அவர் இருப்பது சட்ட விரோதமானது என்பதை அவைக்கு ஏற்கெனவே நான் அறிவித்து இருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதுகுறித்து எத்தகைய நடவடிக்கையை மாநில அரசு, மைய அரசோடு கலந்து எடுக்க வேண்டுமென்பதை ஆய்ந்து, அந்த நடவடிக்கைகளை எடுக்க முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்த பிறகு, கவன ஈர்ப்புத் தீர்மானம் வரும் என்று சொன்னீர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வைதியலிங்கம் உட்காருங்கள். அது பிறகு வருகிறது. அவசரப்படாதீர்கள், உட்காருங்கள்.

முற்பகல் 10-35

(ஆ) காவிரி நீர் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று சொல்லக்கூடிய தஞ்சையிலே வாழக்கூடிய விவசாயிகள் எல்லாம் தங்களுடைய நெற்பயிர்கள் வாடிவிடுமோ என்று சொல்லி, அடிவயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே, காவிரியிலே தண்ணீர் வராதா என்ற கேள்விக்குறியோடு ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். கர்நாடக அரசு காவிரி நீரை விடமாட்டோம் என்று சொல்லி மறுத்ததன் காரணமாக நாங்களும் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறோம். ஆகவே, இன்று தமிழகத்தினுடைய நெற்களஞ்சியத்தை உருவாக்கக்கூடிய அந்தப் பகுதியிலே பயிர்கள் எல்லாம் வாடிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் கர்நாடக அரசிடமிருந்து காவிரி நீரைப் பெறுவதற்கு நம்முடைய தமிழக அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது? பத்திரிகையிலேகூட செய்தி வந்து கொண்டிருக்கிறது. இப்படி பத்திரிகைச் செய்திகள் வருவதனாலே, பிரச்சினைகள் நிச்சயமாகத் தீர்ந்துவிடப் போவதில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இன்னும் முனைப்போடு செயலாற்றி, கர்நாடக அரசிடமிருந்து எந்த வகையில் காவிரி நீரைப் பெற இருக்கிறார்கள்? கட்சி வித்தியாசம் இல்லாமல் அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, தமிழகத்திற்குத் தண்ணீரைப் பெறுவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்ல முயற்சிகள் மேற்கொள்வார்களா? எந்த முயற்சியின் அடிப்படையிலே காவிரி நீரைப் பெற இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டு நான் அமர்கிறேன்.